செய்தி வெளியீடு எண்:209 நாள்:22.4.09

<u>பத்திரிக்கைக் குறிப்பு</u>

இலங்கை அரசுக்கு கண்டனத்தைத் தெரிவிக்கவும், இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களைக் காப்பாற்ற மத்திய அரசு உடனடியாக இலங்கையில் போர் நிறுத்தத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் ஆகிய கோரிக்கைகளை உள்ளடக்கி 23.4.2009 (வியாழக்கிழமை) காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை அமைதியான முறையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவேண்டும் என்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேண்டுகோள் இன்று காலை பத்திரிக்கைகளில் வெளியாகியுள்ளது.

2. இந்த அறிவிப்பினால் எழக்கூடிய சட்ட ஒழுங்கு நிலைமைகள் குறித்து விவாதிப்பதற்காக சீராய்வுக் கூட்டம் ஒன்று தலைமைச் செயலாளர் அவர்களால் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில், மக்களின் அன்றாட வாழ்க்கை, போக்குவரத்து மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியவை பாதிக்கப்பட மாட்டாது என்றும், பொதுமக்களுக்கோ மற்றும் பொதுச் சொத்திற்கோ பங்கம் விளைவிக்கும்வண்ணம் வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், எல்லாத் தரப்பினரும் அமைதி காத்திட வேண்டுமென்றும், வேலை நிறுத்த நாளன்று சட்டம் ஒழுங்கை பாதுகாக்க மாவட்ட நிர்வாகத்திற்கும் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கும் தக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அவைகளின் விவரங்கள் பின்வருமாறு:

அத்தியாவசியத் தேவைகளான தொலைபேசி மற்றும் தொலைத் தொடர்பு, குடிநீர் வழங்கல், பால் வினியோகம், மின் வினியோகம், செய்தித் தாள்

வினியோகம், மருத்துவமனைகள், தீயணைப்புத் துறை ஆகியவற்றின் செயல்பாடுகள் தகுந்த பாதுகாப்புடன் பராமரிக்கப்பட வேண்டும்; முக்கிய கட்டமைப்புகளான, மின் நிலையங்கள், துணை மின் நிலையங்கள், அரசு கட்டிடங்கள், தகவல் தொடர்பு நிலையங்கள், பாலங்கள், எண்ணெய் கிடங்குகள் மற்றும் இரயில்வே மேம்பாலங்கள் ஆகியவற்றிற்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டும்; மத்திய மற்றும் மாநில அரசு அலுவலகங்கள் தங்குதடையின்றி செயல்படுவதற்கான தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்; அரசு போக்குவரத்துத் துறை தேவைப்படும் மாற்று ஏற்பாடுகள் செய்து பொது மக்கள் போக்குவரத்திற்கு தக்க ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், இதற்கு மாவட்ட நிர்வாகமும், காவல் துறையினரும் தகுந்த பாதுகாப்பு அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மேலும் முக்கிய இடங்களை உள்ளடக்கி போலீஸ் ரோந்துப் பணிகள் உடனே ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், குடிநீர், பால் மற்றும் இதர அத்தியாவசியப் பொருட்களை தடையில்லாமல் வினியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், உயர்நீதிமன்றம் மற்றும் இதர நீதிமன்றங்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும், பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு குந்தகம் விளைவிப்போர்கள், பணிக்குச் செல்பவர்களை தடுப்பவர்கள், இந்த வேலை நிறுத்த அறிவிப்பை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுதல் மற்றும் வன்முறை, நாசவேலை ஆகிய செயல்களில் ஈடுபடும் சமூக விரோதிகள் ஆகியோர் மீது தக்க நடவடிக்கைகளை எடுக்கவும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

தேவையான இடங்களில் காவல் துறையினர் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட வேண்டுமென்றும், இரயில் நிலையங்கள், பேருந்து பணிமனைகள், முக்கிய சாலைகள், முக்கிய சந்திப்புகள், மருத்துவமனைகள், நீதிமன்றங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் அரசியல் கட்சிகளின் அலுவலகங்கள் ஆகியவைகளுக்கு காவல் துறையினர் தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும், சந்தைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும், சம்பவங்கள் நடக்கும்பொழுது சரியான நேரத்தில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கும் வகையில், அனைத்து காவல் துறை கட்டுப்பாட்டு அறைகளும் தகுந்த முன்னேற்பாடுகளுடன் இருக்கவேண்டுமென்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளன.

மாநிலம் முழுவதும் தற்போது நடைபெற்றுவரும் தேர்தல் குறித்த பணிகள் எந்தவித தங்குதடையுமில்லாமல் நடைபெற தேவையான அனைத்து நடவடிக்கைகளும் சம்பந்தப்பட்ட துறையினர் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரில் காவல் துறை ஆணையாளர்களும், இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

தலைமைச் செயலாளர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9